**சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க உத்தியோகத்தர்களின் பரிசு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் சுங்க கட்டளைச் சட்டத்தின் (235 ஆவது அத்தியாயம்) 153(2)(ஆ) பிரிவினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இலங்கை நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக

அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு “திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு” என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் அரசுடமையாக்கல் வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யும் கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. | சுங்கத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளில் அமுல்படுத்தப்படுகின்ற சிக்கலான பணிப் பொறுப்புக்களில் பரிசு நிதியத்திற்குரிய கணக்குகளை தயாரிக்கும் போது சுங்க புலனாய்வுகள் முடிவடைந்ததன் பின்னர் அந்தந்த பிரிவினால் உரிய பரிசுக் கோவைகள் காசு பிரிவிற்கு அனுப்பப்பட்டதன் பின்னரே அந்த கணக்கு தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுகின்றது. அதன் போது ஒவ்வொரு பரிசு கோவைக்கும் உரிய இந்த பரிசு நிதியத்திற்கு செலுத்தப்படுகின்ற பணத்தின் அளவினை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றது. பரிசுக் கோவையொன்று தயாரிக்கப்பட்டு அதற்குரிய கொடுப்பனவுகள் அநேகமாக அந்த கோவை தயாரிக்கப்பட்ட நிதி ஆண்டிலேயே மேற்கொள்ளப்படாமையினால் எந்தவொரு வருடத்திலும் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதியை மிகவும் சரியாக காட்டுவதற்கு இந்த முறைமையில் முடியும். | அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மேலே (அ) நியமத்தின் 21(இ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக் கட்டளையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்களுக்கு இடையில் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒரு பகுதியாக இருந்தும் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் தொகுதியில் காசுப்பாய்ச்சல் கூற்றுக்குப் பதலிாக நிதிய கிடைப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். இந்த நிதியத்திற்காக தனியான காசேடு மற்றும் பேரேட்டுக் கணக்கொன்று பேணிச் செல்லப்படாமையினால் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்தல் வசதியீனமாக இருந்தது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன், காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட 113 சுங்க புலனாய்வுகளுக்குரிய கோவைகளில் 90 புலனாய்வுகளுக்குரியதாக கிடைத்த ரூபா 652,704,559 தொகையான தண்டப் பணத்தொகையில் நிதியத்தின் பங்களிப்பான 50 சதவீத அளவான ரூபா 326,352,280 தொகை கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது. | புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், சுங்க உத்தியோகத்தர்களின் பரிசு நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய 50 சதவீதம் பரிசு தொகை செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே இனங்காணப்படுகின்றது. அதனால் ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட தொகை கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தண்டப் பணம் மற்றும் விற்பனை வருமானங்களில் சுங்க பரிசு நிதியத்திற்காக 50 சதவீதமும், முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்காக 20 சதவீதமும் ஆக பங்களிப்பு செய்யப்பட வேண்டும். எனினும், முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கான வருமானமாக இனங்காணப்பட்ட 20 சதவீத பங்களிப்பான ரூபா 729,362,588 தொகைக்கு சமமான நன்கொடை நிதியத்தில் 50 சதவீதமான பங்களிப்பு ரூபா 1,823,406,470 ஆக இருக்க வேண்டிய போதிலும், நிதிக் கூற்றுக்களில் வருமானமாக ரூபா 1,843,013,865 தொகை இனங்காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 19,607,395 வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை. | சுங்க பரிசு நிதியத்திற்காக 50 சதவீதமும், முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திற்காக 20 சதவீதமும் பரிசுக் கோவையில் இருந்து நிதியத்திற்கு பிரித்து வழங்கப்பட்ட போதிலும், முன்னுரிமை அடிப்படையில் பகுதியாக கொடுப்பனவு செய்யும் போதும், ஒற்றர்களுக்கு படி மாத்திரம் செலுத்தும் போதும் சுங்க உத்தியோகத்தர்களின் பரிசு நிதியம் மாத்திரம் குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும், பின்னைய சந்தர்ப்பங்களின் போது முழுமையான பரிசு கோவை செலுத்தும் போது உரிய 02 பேரேட்டிலும் சரியாகஇடப்படுகின்றது. | ஒரே வருமான மூலத்தின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களுக்கு இடையே வருமானத்திற்கு சமமான நிலைமையொன்று ஏற்படும் வகையில் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | விரிவான வருமான கூற்றில் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 105,045,877 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும், இது செலவினத்தை விஞ்சிய வருமானம் அல்லாதிருந்ததுடன், | ரூபா 105,045,877 தொகையான நிதியத்தின் பெறுவனவுகளில் கொடுப்பனவுகளை கழித்ததன் பின்னர் பெறப்படுகின்ற | ஆண்டின் போது கிடைக்கின்ற சகல நிதியும் உரிய பிரகாரம் கணக்கீடு செய்தல் மற்றும் பரிசு நிதியத்தின் பெறுவனவுகள் குறித்த உத்தியோகத்தர்களுக்கும், |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் பரிசு நிதியத்தின் உப நிதியத்திற்காக பணம் செலுத்தாமையின் காரணமாக ஏற்பட்ட மீதியாக இருந்தமை வதானிக்கப்பட்டது. | பெறுமதியாகும். | உப நிதியங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டு, நிதியத்தின் தேறிய மீதி சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) ஆம் பிரிவு. | பரிசு நிதியத்திலிருந்து பரிசு பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடினை பெற்று அதற்காக பொருத்தமான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் சுங்க பரிசு நிதியம் பகிர்ந்தளிப்பதற்காக விநியோகிக்கப்பட்டிருந்த 1988 சனவரி 28 ஆம் திகதிய பீஎல் 118 ஆம் இலக்க திணைக்கள கட்டளைக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், 1999 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான 21 வருட காலத்தில் பரிசுப் பணமாக உத்தியோகத்தர்களுக்கக ாக ரூபா 15,535,028,822 தொகையும், ஒற்றர்களுக்காக ரூபா 1,872,960,149 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | சுங்க கட்டளைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் கிடைக்கின்ற நலன் திட்டம் சுங்க வரலாற்றில் நீண்ட காலமாக அமுல்படுத்தப்படுகின்றது. 1956 இன் போது வெளியிடப்பட்ட சங்க கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் மூலம் பரிசு செலுத்தும் பொறிமுறை தொடர்பாக குறிப்பாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கிடைக்கின்ற தண்டப் பணம் அல்லது பெறுவனவுகளில் அரைவாசி திறைசேரி பிரதி செயலாளருக்கு செலுத்தப்படுவதுடன், மற்றைய அரைப் பகுதி பிடிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு அல்லது தகவல்களை வழங்குபவர்களுக்கு அல்லது அந்த முறையில் அதன் தரப்பினர்கள் இரண்டு பேருக்கும் ஒன்று சேர்க்கின்ற அவர்களினால் குறிப்பிடப்பட்ட முறையில் செலுத்தப்படுகின்றது. இந்த உத்தேச முறைமை கௌரவ நிதி அமைச்சரினால் கட்டாயமாக | 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) பிரிவின் பிரகாரம் பரிசு பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக தயாரிக்கப்பட்ட திட்ட முறைமைக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அங்கீகாரம் இது வரையிலும் கண்டறியப்படவில்லை. 153(அ) (2) ஆம் பிரிவின் கீழ் நிதிப் பிரமாணத்தில் வெளியிடப்பட்டுள்ளமையினால் அந்த வருடத்திலேயே திணைக்களத்தின் 118 ஆம் கட்டளையின் கொடுப்பனவு முறைமை அங்கீகரிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 105,045,877 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 122,898,009 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 17,852,132 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுங்க தவறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற சுங்க புலனாய்வுகளின் போது பொதுவான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய ஆகக் குறைந்த வரி வருமானத்தின் அளவை அறவிடுதல் தொடர்பாக கவனத்தில் கொள்ளாது, இழக்கப்பட்ட வருமானத்தையும் உள்ளடக்கும் வகையில் சுங்க தவறுகள் தொடர்பாக தண்டங்களை விதித்து அவ்வாறு விதிக்கப்பட்ட தண்டப்பணத் தொகையில் 50 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு பரிசளிப்பதற்கு முன்மொழியப்பட்டதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் குறைவாக இருந்த போதும், உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பரிசு பணங்களின் அளவு அதிகரித்து | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுங்க கட்டளைச் சட்டம் இது வரையில் 151 வருடங்கள் அளவிலான பழையதாக இருந்ததுடன் அந்த காலத்தின் போது காணப்பட்ட இறக்குமதி ஏற்றுமதி நிலைமையின் அடிப்படையில் இந்த சட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், அது தற்போதைய ஏற்றுமதி, இறக்குமதி நிலைமையினைக் கவனத்தில் கொண்டு சட்டத்தினை தற்போதைய நிலைமைக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்தமை மற்றும் சுங்க வரி மோசடி மேற்கொள்ளக் கூடிய தவறுகள் தொடர்பாக அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சுங்க கட்டளைச் சட்டம் திருத்தப்பட வேண்டும். |

காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக கீழே குறிப்பிடுகின்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாட்டில் காணப்படுகின்ற சுதந்திர பொருளாதார கொள்கையின் காரணமாக இறக்குமதியாளர்களிடம் இருந்தும் ஏற்றுமதியாளர்களிடமிருந்தும் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு ஈடுசெய்யும் வகையில் சுங்க கட்டளைச் சட்டத்தை போல இந்த நிதியங்களில் சட்ட ரீதியான நிதி ஏற்பாட்டை முறையாகவும், கால ரீதியாகவும் திருத்த வேண்டிய தேவை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) இந்த நிதியத்தின் கீழ் பரிசு செலுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்ட சுங்க புலனாய்வுகள் அநேகமானவை,

- பொருட்களின் பெறுமதி குறைவாக காண்பிக்கப்பட்டமை
- குறித்த பொருளின் வகைப்படுத்தல் இலக்கம் (HS CODE) தவறாக காண்பிக்கப்பட்டமை
- வெளியிடப்படாத பொருட்கள் கொண்டுவரப்பட்டமை
- வெளியிடப்பட்ட பொருட்களை விட அதிகமான பொருட்கள் கொண்டுவரப்பட்டமை
- வெளியிடப்பட்ட பொருட்களுக்கு பதிலாக ஏனைய பொருட்கள் கொண்டுவரப்பட்டமை
- இலங்கைக்கு இறக்குமதி தடை செய்யப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமை மற்றும் ஏற்றுமதி தடை செய்யப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டமை
- வெளியிடப்படாத பணம் நாட்டிற்கு எடுத்து வரப்பட்டமை மற்றும் எடுத்துச் செல்லப்பட்டமை

போன்ற சுங்க தவறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சுங்க தவறுகளை தடுப்பதற்காக இலங்கை சுங்கத்தில் நிரந்தர சம்பளம் பெறுகின்ற

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் சகல பிரிவுகளுக்காகவும் ஈடுபடுத்தி இருக்கும் போதும், தொடர்ந்து காணப்படுகின்ற இவ்வாறான சுங்க தவறுகளினால் அரசாங்க வருமானத்திற்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களை கட்டுப்படுத்துவதற்காக போதியளவான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | நிலுவை தண்டப் பண வருமானம் சேகரித்தல் | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட ரூபா 4,917,293,735 தொகையான தண்டப் பண வருமானத்தில் ரூபா 3,351,644,800 தொகையொன்று 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அட்டுறுவாக காணப்படுகின்ற வருமானமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த தொகையில் மீளாய்வாண்டின் போதும் எந்த தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை தண்டப் பணத்தை அறவிடும் திட்ட முறைமையொன்றை மீளாய்வு செய்தல் மற்றும் காலரீதியில் தீர்வினை பெற்றுக் கொடுத்தல். |
| (ii) | மேற்கூறப்பட்ட நிலுவைத் தொகையில் 15 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக ரூபா 230,887,320 தொகையான தண்டப் பணத் தொகைக்காக 2009 ஆம் ஆண்டு முதல் நிதி அமைச்சருக்கு முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டமை அறிவிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், அதில் ரூபா 64,565,588 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை தண்டப் பணத்தை அறவிடும் திட்ட முறைமையொன்றை மீளாய்வு செய்தல் மற்றும் காலரீதியில் தீர்வினை பெற்றுக் கொடுத்தல். |
| (iii) | நிலுவை தண்டப் பண வருமானத்திற்குரிய 113 கோவைகளின் அளவில் ரூபா 24,550,000 தொகைக்குரிய 02 கோவைகள் சுங்க வளாகத்தில் காணாமல் போயிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்க பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு | | |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும். | | |
| (i) | முறையான பிரகாரம் பேரேட்டு கணக்கு முறைமையொன்று பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படாமை. | முறையான கணக்கு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றது. அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட்ட போதிலும், வருமானங்கள் பரிசு கோவை செலுத்துவதற்கு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே வருமானம் இனங்காணப்படுகின்றது. | காணப்படுகின்ற முறைமை மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தி கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்வதற்காக நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | பரிசுப் பணத்தை கணிப்பீடு செய்யும் போது அரசாங்கத்தின் வரி வருமானத்தை பாதுகாக்கும் வகையிலும், சுங்க வரி மோசடிகளை கட்டுப்படுத்தும் வகையிலும் மற்றும் சுங்க வரி மோசடிகளில் ஈடுபடுகின்ற தரப்பினர்களுக்கு ஆகக் கூடிய பாதகமொன்று கிடைக்கும் வகையிலும் பிரயோக ரீதியில் கணிப்பிடும் செயல்நடவடிக்கையொன்று பின்பற்றப்படாமை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | காணப்படுகின்ற முறைமை மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தி கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்வதற்காக நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | கணக்கு பிரிவிற்கு பரிசு கோவைகள் கிடைத்த சந்தர்ப்பத்தின் போது அந்த கோவைகள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை மற்றும் தொடர் இலக்கத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படாமை. | கணக்கு பிரிவிற்கு பரிசு கோவைகள் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தின் போது அவற்றிக்கு தொடர் இலக்கம் வழங்கப்பட்டிருந்ததுடன், பரிசு கோவைகள் அந்த தொடர் இலக்கத்தின்படியே செலுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் விஷேட சந்தர்ப்பங்களின் போது உரிய கோரிக்கையின் பிரகாரம் முன்னுரிமை அடிப்படையில் பரிசுக் கோவைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. | காணப்படுகின்ற முறைமை மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தி முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்வதற்காக நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

#### 3.2.1 செயலாற்றல்

சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) பந்தியின் பிரகாரம் பல்வேறு சுங்க தவறுகளுக்காக விதிக்கப்படுகின்ற தண்டப் பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் விற்பனையினால் கிடைக்கின்ற தொகையில் 50 சதவீதத்திற்கு சமமான தொகையொன்று சுங்க உத்தியோகத்தர்களின் பரிசு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன், சுங்க வரி மோசடிகள் வெளிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல் போன்ற நோக்கங்களில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஒற்றர்களுக்கும் பரிசுகளை வழங்குவதற்காக இந்த நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான கிடைத்த கொடுப்பனவுகள் தொடர்பான பொழிப்பொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | செலுத்தப்பட்ட பரிசு கோவையின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட மொத்த பரிசுத் தொகை | உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட்ட பங்கு | ஒற்றர்களுக்காக செலுத்தப்பட்ட பங்கு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 2012 | 183 | 952,882,430 | 658,519,186 | 128,208,276 |
| 2013 | 286 | 1,509,280,909 | 1,089,268,962 | 121,281,124 |
| 2014 | 343 | 1,353,531,889 | 953,858,131 | 117,310,035 |
| 2015 | 274 | 1,252,772,591 | 1,090,976,365 | 123,347,553 |
| 2016 | 279 | 2,371,231,289 | 1,629,006,445 | 185,138,406 |
| 2017 | 246 | 2,316,128,767 | 1,658,990,867 | 109,462,461 |
| 2018 | 266 | 2,462,038,890 | 1,635,981,137 | 237,337,440 |
| 2019 | 231 | 1,843,013,865 | 1,104,988,629 | 295,409,615 |
| | | 14,060,880,630 | 9,821,589,722 | 1,317,494,910 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கூட்டு மொத்தமாக ரூபா 11,139,084,632 தொகையொன்று உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், அதில் ரூபா 9,821,589,722 அதாவது, 88 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | உத்தியோகத்தர்களுக்காக பரிசு பணத்தை செலுத்தும் போது தற்போதைய நிலைமைக்கு ஈடுகொடுக்கும் வகையில் பொருத்தமான திட்டமொன்று இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சுங்க உத்தியோகத்தர்களுக்கு பரிசு செலுத்துவதற்காக முறையான திட்ட முறையொன்று இது வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் செலுத்தப்பட்ட தொகை ரூபா 787 மில்லியன் அளவாக இருந்த போதிலும், 2019 வரையில் அது ரூபா 1,400 மில்லியன் வரை அதாவது, 78 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறு இந்த பணம் அந்தந்த வருடங்களின் போது புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தியான சுங்க தவறுகள் சிலவற்றிக்கு தொடர்பாக செலுத்தப்பட்ட போதிலும், புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத சம்பவங்களின் அளவுகள் உயர் பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சுங்க வரி மோசடிகளில் கவனத்தில் கொள்ளக் கூடிய கட்டுப்பாடு அல்லது குறைவொன்று பரிசு முன்மொழிவு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள பதில் பொருத்தமானதாகும். | உத்தியோகத்தர்களுக்காக பரிசு பணம் செலுத்தும் போது தற்போதைய நிலைமைக்கு ஈடுகொடுக்கும் வகையில் பொருத்தமான திட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | பரிசு நிதியத்தின் உப நிதியம் ஒன்றான எரிபொருள் நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 51,904,699 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த தொகையை ஸ்தாபித்ததன் நோக்கமான சுங்க புலனாய்வுகளுக்காக தேவையான எரிபொருள் செலவினத்தை தீர்த்துக் கொள்வதாக காண்பிக்கப்பட்ட போதிலும், புலனாய்வு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் கிரயம் திணைக்களத்தின் பொது செலவின தலைப்பின் செலவினப் பொறுப்பாக வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது அந்த நிதியத்திலிருந்து ரூபா 12,099 செலவினம் ஒன்று மாத்திரம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சராசரியான தேவையினை கவனத்தில் கொள்ளாமல் தொடர்ச்சியாக இந்த நிதியத்திற்கு பணத்தை சேகரித்து வைத்தமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அந்த மீதி ரூபா 555,279,601 ஆக காணப்பட்டது. | ஆண்டில் எரிபொருள் நிதியத்தின் கீழ் கொடுப்பனவு செய்வதற்காக கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | (i) தேவையின் அடிப்படையில் சரியான மதிப்பீடு தீர்மானிக்கப்படாமல் பணம் ஒதுக்கப்பட்டதன் காரணமாக பாரியளவான தொகையொன்று ஒன்று திரண்டிருந்தமையை சரிசெய்தல்.<br>(ii) திறைசேரியில் இருந்து விசாரித்து நிதியத்தின் மிகை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பரிசு நிதியத்தின் உப நிதியமான போதைப் பொருள் சுற்றிவளைப்புக்களுக்காக பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளுக்காக போதைப் பொருள் நிவாரண நிதியம் (நாகொட்டிக் நிதியம்) இற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 17,624,614 நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 5,428,546 தொகை மாத்திரமே செலவு வைக்கப்பட்டிருந்தது. | திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த உப நிதியத்திற்குரிய நிதியம் மாற்றப்பட்டிருந்ததுடன் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்காக உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | போதைப் பொருள் சுற்றிவளைப்புக்கள் தொடர்பான உத்தியோகத்தர்களுக்காக போதைப் பொருள் நிவாரண நிதியத்தின் மூலம் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் காணப்பட்டால் அவைகளை தீர்த்து வைத்து மிகை தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| (உ) | புலனாய்வு நடவடிக்கைகளுக்காக நேரடியாக பங்களிக்காதிருந்த போதிலும், உதவி சேவைகளை வழங்குகின்ற பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்காக கொடுப்பனவு செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள 2.5 சதவீத நிதியத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 25,952,366 தொகை செலவு வைக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் எந்தத் தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை. | திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த உப நிதியத்திற்குரிய நிதியம் மாற்றப்பட்டிருந்ததுடன் ஆண்டில் கொடுப்பணவுகளுக்காக கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதியத்தில் ஒன்றுசேர்ந்துள்ள பணம் தொடர்பாக திறைசேரியுடன் விசாரித்து நடவடிக்கை எடுத்தல். |